10.02.2026

S.C.No. 780/2022. ,

P.W. 3. திரு.ஆறுமுகம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–

எனது தாயாரும், இவ்வழக்கில் இறந்துபோன ராஜாவும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கின் சாட்சி மந்திரமூர்த்தி இறந்துபோனவருக்கு சொக்காரர்முறை என்றால் சரிதான். சாட்சி ஆனந்த்ராஜ் இறந்துபோன ராஜாவின் அண்ணன மகளை திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். சாட்சி செந்தில் இறந்துபோனவருக்கு மருமகன் முறை வேண்டும் என்றால் சரிதான். சாட்சி ஆனந்த் இறந்துபோனவரின் பெரியப்பா மகன் என்றால் சரிதான். சாட்சி மணிகண்டன் இறந்துபோனவருக்கு சொக்காரர்முறை என்றால் உறவுமுறையில் சொந்ததம். எங்கள் சி.என்.கிராமம், லெட்சுமிபுரத்தில் கொடிமரத்தில் இருந்து மேற்காக சென்றால் எனது வீடு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டில் இருந்து பார்த்தால் முப்பிடாதியம்மன்கோவில் தெரியாது என்றால் சரிதான். எங்கள் வீட்டில் இருந்து மேற்கே கொடி கம்பம் ஒட்டினார் போல் உள்ள கிழக்கு பார்த்த தெருவில் சென்று செல்வராஜ் வீட்டில் இருந்து வடக்கே திரும்பி அதன்பின்பு இவ்வழக்கில் இறந்துபோன ராஜாவின் தெரு வழியாக வந்து ஒரு நான்குமுக்கு சந்திப்பில் இருந்து வடக்கு நோக்கி சென்றால் எங்கள் ஊர் முப்பிடாதியம்மன்கோவில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி முப்பிடாதியம்மன்கோவிலுக்கு செல்லக்கூடிய தெருவானது குறுகலான தெரு என்றால் சரிதான். எங்கள் ஊரில் உள்ள வீடுகள் எல்லாம்

தனித்தனியான காம்பவுண்ட்கள் உள்ள வீடுகள் கிடையாது என்றால் சரிதான். பெருவரியான வீடுகள் பொதுசுவரில் உள்ள வீடுகளாக இருக்கும் என்றால் ஒரு சில வீடுகள் பொது சுவருடனும், ஒரு சில வீடுகள் அடுத்தடுத்து முடுக்குகள் உடனும் அமைந்திருக்கும். அவ்வாறு அமைந்திருக்கும் முடுக்குகள் ஒரு ஆள் நடந்துபோவதுமான முடுக்குகள் என்றால் சரிதான். எங்கள் ஊரில் எனது வீடு அமைந்திருக்கும் பகுதி டவுண் ஏரியாவை சேர்ந்ததாகவும், இறந்துபோனவர் வீடு உள்ள பகுதி ஜங்கஷன் ஏரியாவை சேர்நத்தாகும் என்றால் சரிதான். எதிரி கணேசன் மற்றும் அவரது மனைவி குறுக்குத்துறை மற்றும் மேலப்பாளையம் பகுதியில் வெள்ளரிக்காய் வியாபாரம் செய்து பிழைப்பு நடத்தக்கூடியவர்கள் என்றால் சரிதான். நானும் எனது மனைவியும் வெள்ளரிக்காய் வியாபாரம் பார்க்கிறோம் என்றால் சரிதான். எதிரிக்கு எங்கள் ஊர் சொந்த ஊர் இல்லை என்றால் சரிதான். எதிரி பார்த்து வந்த வெள்ளரிக்காய் வியாபாரத்தை எதிரி வெளியூர்காரர் என்பதால் வியாபாரம் பார்க்கக்கூடாது என்று நான் தடுத்து வந்த சம்பவங்கள் நடந்தது என்றால் அவ்வாறு இல்லை . எதிரியின் உடைமைகளை உடைத்து, அவரை கொலை மிரட்டல் விடுத்தாக என் பெயரிலும், என் மகன் பெயரிலும் திருநெல்வேலி முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது என்றால் சரியல்ல. இறந்துபோன ராஜா என்ன வேலை பார்த்தார் என்றால் கொத்தனார் வேலை பார்த்ததார். யாரிடம் வேலை பார்த்தால் என்றால் மேலப்பாளையத்தை சேர்ந்த ஒருவரிடம் வேலை பார்த்தார். அவரது பெயர் தெரியாது. நானும் இறந்துபோனவருடன் கொத்தனார் வேலை பார்த்தேன் என்றால் இல்லை. இறந்துபோனவர் சம்பவத்தன்று அதே மேஸ்திரியிடம்

வேலைக்கு சென்றார் என்றால் சரிதான். போலிசார் விசாரிக்கும்போது இறந்துபோனவர் அன்றும் மேலப்பாளையம் மேஸ்திரியிடம் வேலைக்கு சென்று வந்த விவரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய தினத்தில் எங்கள் ஊர் முப்பிடாதியம்மன்கோவிலில் எந்த விசேஷமும் நடைபெறவில்லை என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய சமயத்தில் முப்பிடாதியம்மன்கோவிலுக்கு வந்ததருக்கு தனிப்பட்ட காரணம் இல்லை என்றால் எதார்த்தமாக சென்றேன். எங்கள் ஊரில் குலசை முத்தாரம்மன்கோவிலுக்கு மாலை போட்டு, விரதம் இருந்து கோவிலுக்கு செல்லும் வழக்கம் உண்டு என்றால் சரிதான். வருடம் தோறும் நடைபெறும். சம்பவம் நடந்த சமயத்தில் குலசை முத்தாரம்மன்கோவிலுக்கு மாலை போட்டார்களா என்றால் அந்த சமயத்தில் போடவில்லை. அதற்கு பின்பு மாலை போட்டார்கள். எங்கள் ஊரில் உள்ள அம்மன் இருக்கக்கூடிய ஒரே கோவில் முப்பிடாதியம்மன்கோவில் என்றால் சரிதான். குலசை கோவிலுக்கு மாலை போடுபவர்கள் மாலைபோட்டு கோவிலேயே தங்கி விரதம் இருந்து குலசை கோவிலுக்கு செல்வது தான் வழக்கம் என்றால் சரிதான். எங்கள் ஊர் உள்ளூர் பூசாரிகள் யார் என்றால் 3 பேர். அவர்கள் குலசேகரன், மந்திரம் மற்றும் ஒருவர் அவர் பெயர் தற்சமயம் ஞாபகமில்லை. அவர்கள் மூவருக்கும் எங்கள் ஊரிலேயே சொந்தமாக வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அவர்களது வீடுகள் இறந்துபோன ராஜாவின் வீடு உள்ள வடக்குதெருவில் அமைந்துள்ளது என்றால் சரிதான். போலிசார் எங்கள் ஊருக்கு வந்த சமயத்தில் மேற்படி பூசாரிகள் மூவரும் அங்கிருந்தார்கள் என்றால் இல்லை. பூசாரிகள் வீடுகள்

எங்குள்ளது என்பது குறித்து என்னிடம் விசாரித்தார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய சமயத்தில் இறந்துபோன ராஜாவும், அவரது மனைவி, மகன் ஆகியோர் ராஜா காயம்பட்டவுடன் அவர்கள் கொண்டு வந்த பழம்,பத்தியை போட்டுவிட்டு ராஜாவை தூக்கினார்களா என்றால் இல்லை. நானோ, இறந்துபோன ராஜாவின் மகன் கணேசனோ எதிரியை தடுப்பதற்கோ, ராஜாவை காப்பாற்றுவதற்கோ எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் எதிரி பக்கத்தில் வரக்கூடாது என்று சொல்லிவிட்டார். எதிரி சென்ற பின்னர் நாங்கள் காயம்பட்ட ராஜாவை தூக்கி எங்கு காயம்பட்டது என்று பார்த்தோமா என்றால் நான் தூக்கி பார்க்கவில்லை. என்னுடைய ஆடைகளில் ரத்தம்படவில்லை என்றால் சரிதான். சத்தம்கேட்டு கோவிலின் நான்குமுக்கு தெருவில் உள்ளவர்களும் பக்கத்துவீட்டுக்காரர்களும் வந்தார்கள் என்றால் ஆட்டோவில் ஏற்றியபின்பு வந்தார்கள். நானும் ஆஸ்பித்திரி சென்றேனா என்றால் சென்றேன். போலிசார் என்னை விசாரிக்கும்போது வழக்கு சம்பவத்திற்கு ஒருவாரத்திற்கு முன்பு ராஜா எதிரியிடம் ரூ.50,000/- வாங்கிய விவரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். பணம் வாங்கியதாக சொல்லக்கூடிய சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததா கசொல்லக்கூடிய சமயத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு பணத்தை திருப்பகேட்டு எதிரி ராஜாவை பணத்தை திருப்பக்கேட்டு அசிங்கமான வார்த்தைகளால் திட்டியவிவரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரிக்கும்போது ஒரு வாரத்திற்கு முன்பு எதிரி பணத்தை திருப்பக்கேட்டு அசிங்கமான வார்த்தைகாளல் திட்டிய விவரத்தை சொல்லவில்லை

என்றால் சரியல்ல. சொன்னேன். போலிசார் விசாரணையின்போது முப்பிடாதியம்மன்கோவிலுக்கு இறந்துபோனராஜாவும், அவரது மனைவி மற்றும் மகனும் லைட் வெளிச்சத்தில் வந்தார்கள் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல சொன்னேன். எனக்கு கட்டைக்கும், கம்புக்கும் வித்தியாசம் தெரியும் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் எதிரி கட்டையால் ஓங்கி ராஜாவை அடித்தார் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். போலிசார் விசாரிக்கும்போது இறந்துபோன ராஜாவின் வீடு எங்கிருக்கிறது என்று கேட்டு அங்கும் சென்று பார்வையிட்டு விசாரித்தார்கள் என்றால் சரிதான். இறந்துபோன ராஜா சி.என்.கிராமத்தில் மாற்றுசமுதாய மக்களிடமும் நிறைபேரிடம் பணம் கடனாக பெற்றுக்கொண்டு அதை திருப்பி செலுத்தாமல் இருந்ததால் விரோதம் இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவத்திற்கு முதல் நாள் 16.08.2022ம் தேதி எங்கள் ஊரில் முப்பிடாதியம்மன்கோவிலில் வைத்து மந்திரம் என்ற நபரிடம் இறந்துபோன ராஜா குடித்துவிட்டு பிரச்சனை செய்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இறந்துபோன ராஜா 17.08.2022ம் தேதி இரவு 8.00 மணிக்கு அவரது வீட்டில் வைத்து வேறுநபர்களுடன் ஏற்பட்ட தகராறில் வேறு ஆயுதங்களால் காயப்படுத்தப்பட்டார் என்றால் சரியல்ல. நான் முன்விசாரணையில் சொன்னபோன்று 17.08.2022ம் தேதி நான் எங்கள் ஊர் முப்பிடாதியம்மன்கோவிலுக்கு சென்றதாக சொல்வதும், அன்றையதினம் இரவு 7.00 மணிக்கு கோவிலில் லைட் வெளிச்சம் இருந்ததாக சொல்வதும், அங்கு இறந்துபோன ராஜா, அவரது மனைவி,மற்றும் மகனோடு வந்ததாக சொல்வதும்,இவ்வழக்கின் எதிரி

அவரது பணத்தை திருப்பிக்கேட்டு கட்டையை எடுத்து கை, மூக்கு, தலை, நெஞ்சு ஆகிய பகுதிகளில் அடித்தாக சொல்வதும், பக்கத்தில் யாரும் வந்தால் கொன்றுவிடுவதாக மிரட்டியதாக சொல்வதும், கட்டையை போட்டுவிட்டு அங்கிருந்து தப்பிஓடியதாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு எதிரி இறந்துபோன ராஜாவிடம் பணத்தை திருப்பிக்கேட்டு ஆபாசமாக ஏசி பிரச்சரனை செய்ததாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. இறந்துபோனராஜாவுக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால்சரியல்ல. சா.பொ.1 ஆயுதத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே எதிரி குடும்பத்தோடு எனக்கு இருந்த விரோதத்தின் அடிப்படையிலும், இறந்துபோன ராஜா எனது உறவினர் என்பதாலும் இந்த வழக்கில் எதிரியை தொடர்புபடுத்தி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன ராஜா முப்பிடாதியம்மன்கோவிலின் அருகில் காயப்படுத்தப்பட்டதாக சொல்வது உண்மையல்ல என்றும் அவரது வீட்டில் இந்த எதிரி அல்லாத ராஜாவிற்கு மட்டுமே தெரிந்த வேறுநபர்களால் காயப்படுத்தப்பட்டார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.